OS 203/2017

பி.வா.சா.2 சீனுவாசன் த/பெ கண்ணப்பன்

நாள் 27.02.2026

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வா.சா.ஆ.1ல் 2வது பக்கத்தில் எனது கையொப்பத்திற்கு மேலே அடித்தல் இருக்கிறது அது என்ன என்று சொல்லமுடியுமா என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 எங்கு எழுதப்பட்டது என்றால் வாதி நீலகண்டன் அலுவலகத்தில் எழுதப்பட்டது. அந்த ஆவணம் எழுதும் போது யார் யார் இருந்தார்கள் என்றால் நான் இருந்தேன் வாதி மற்றும் பிரதிவாதி இருந்தார்கள். அந்த ஆவணத்தை யார் எழுதியது என்றால் அது தெரியாது. ஆவணத்தை எழுதியதை நான் பார்த்தேனா என்றால் இல்லை நீலகண்டன் அலுவலகத்தில் ஏற்கனவே ஆவணம் எழுதப்பட்டிருந்தது. அந்த ஆவணத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை. யார் என்னை கையொப்பம் போட சொன்னது என்றால் ரமேஷ் குமார் என்னை அழைத்து சென்றார் அவருக்காக கையொப்பம் போட்டேன். எதற்காக சாட்சி கையொப்பம் போட வேண்டும் என்று ரமேஷிடம் கேட்டேனா என்றால் கேட்டேன். மார்ட்கேஜ் போடுவதற்காக கையொப்பம் போட சொன்னார்.

2. பொதுவாக சாட்சி கையொப்பம் போடுவதற்கு முன்பாக அது என்ன ஆவணம் என்று தெரிந்து கொண்டு சாட்சி கையொப்பம் போடுவோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் இன்றைய தேதியில் ரூ.3,50,000/- பெற்றுக்கொண்டதாக வாசகம் உள்ளது என்றால் அதில் அவ்வாறு தான் உள்ளது. என் முன்னிலையில் எந்த பரிவர்த்தனையும் நடக்கவில்லை. என் முன்னிலையில் பரிவர்த்தனை நடக்கவில்லை என்று கூறும் நிலையில் ஏன் சாட்சி கையொப்பம் போட வேண்டும் என்று கேட்டேனா என்றால் ஏற்கனவே அக்ரிமெண்ட் மூலமாக பணம் வாங்கியிருக்கிறேன். அந்த தொகைக்கான வட்டியுடன் சேர்த்து அடமானம் எழுதப்பட்டது என்று சொன்னார். வா.சா.ஆ.1ல் நான் மேலே சொன்னவாறு ஏற்கனவே ஏற்பட்ட அக்ரிமெண்ட் தொகைக்கு வட்டியுடன் எழுதப்பட்டது என்று வாசகம் உள்ளதா என்றால் அது போன்ற வாசகம் இல்லை. வா.சா.ஆ.1ல் அசையா சொத்து குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் காட்டப்பட்டுள்ளது. அது யாருடைய சொத்து என்றால் ரமேஷின் சொத்து ஆகும். வா.சா.ஆ.1ல் உள்ள சொத்து விவரம் யார் சொல்லி எழுதப்பட்டது என்றால் பிரதிவாதி ரமேஷ் குமார் சொல்லி தான் எழுதப்பட்டது.

3. ஆவணம் எழுதிய பிறகு ரிஜிஸ்டர் ஆபிசிற்கு சென்றோம். ரிஜிஸ்டர் ஆபிசில் வாதி, பிரதிவாதியை நான் அடையாளம் காட்டினேன். எனது நிரூபண வாக்குமூலத்தில் வட்டி செலுத்தியதாக சொல்லியிருக்கும் விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் என் முன்னிலையில் தான் வட்டி கொடுக்கப்பட்டது. பிரதிவாதி எனது நண்பர் என்பதால் என்னை அழைத்து செல்வார். கிரைய ஒப்பந்தம் போடப்பட்ட விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம் தெரியாது. வாதி நீலகண்டன் என்னை கணக்கு போட சொன்னார் நான் கணக்கு போட்டு தந்தேன். எந்த தேதியில் கணக்கு பார்த்தேன் என்றால் 22.01.2009 தேதியில் கணக்கு பார்த்தேன். எந்த தேதியில் இருந்து எந்த தேதி வரை கணக்கு போடப்பட்டது என்றால் 10.01.2007 முதல் 10.01.2009 வரை மொத்தம் 24 மாதங்களுக்கு கணக்கு போடப்பட்டது.

4. வாதி நீலகண்டன் கணக்கீடு சொன்ன விவரத்தை நான் லெட்டர் பேடில் எழுதினேன் நான் கணக்கீடு செய்யவில்லை. ரமேஷ்குமார் ரூ.78,500/-ஐ நீலகண்டனிடம் கொடுத்தார். அந்த விவரத்தை நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். வா.சா.ஆ1 அடமானம் எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் 2009 வருடம் 12வது மாதம் எழுதப்பட்டது தேதி நியாபகம் இல்லை. வா.சா.ஆ.1ஐ எழுதும் போதே அக்ரிமெண்ட்டை ரத்து செய்ய வேண்டும் என்பது தான் பேச்சு என்றால் ஆமாம் அக்ரிமெண்ட்டை ரத்து செய்வதற்கும் எழுதி எடுத்து வந்தார் அதிலும் நான் சாட்சி கையொப்பம் செய்து இருக்கிறேன். அடமானப்பத்திரம் எழுதினால் அக்ரிமெண்ட்டை ரத்து செய்வதாக சொல்லிவிட்டு அக்ரிமெண்ட்டை ரத்து செய்யாத நிலையில் அடமானப்பத்திரத்தை பதிவு செய்ய கூடாது என்று ஆட்சேபனை செய்யப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. நான் சொன்னது போல் மேற்படி சம்பவம் நடக்கவில்லை என்றாலும் எனது நண்பருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி வாதியிடம் கடன் வாங்கிக்கொண்டு தான் அடமானப்பத்திரம் எழுதி கொடுத்தார் என்றாலும் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.